# சிங்காரச்சென்னை

SINGHARA CHENNAI

ஆசிரியர் S. ரங்கநாதன் | தமிழ் மாதம் இருமுறை

| 20 டிசம்பர் 2009 - 04 ஜனவரி 2010 | மலர் 1 இதழ் 24 | இலவச விநியோகம் | 8 பக்கங்கள் |
|---|---|---|---|
| 20 DECEMBER 2009 - 04 JANUARY 2010 | VOLUME 1- ISSUE 24 | Free distribution | 8 PAGES |


## மாமன்ற உறுப்பினர் வா. கணேசன் துவக்கி வைத்த பம்பிங் ஸ்டேசன் பணி



108வது வட்ட கோமதி நாராயணாசாலையில் (ஜி.என்.செட்டி ரோடு) பாலாமந்திர் பள்ளி அருகில் குடிநீர் வாரியத்தினரால் அமைக்கப்படும் பம்பிங் ஸ்டேசன் பணியினை மாமன்ற உறுப்பினர் வா. கணேசன் துவக்கி வைத்தார. உடன் பொறியாளர்கள் முருகன், மோகன அரசு மற்றும் பணியாளர்கள்

## மணமக்களை G.K. வாசன் வாழ்த்தினார்



தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நலவாரியத் தலைவர் டாக்டர் சேம. நாராயணன் அவர்களின் இல்லத் திருமண விழா திருப்பதியில் நடைபெற்றது. மணமக்களை சென்னையில் அவர்களது இல்லத்தில் மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ஜி.கே.வாசன் அவர்கள் நேரில் வந்து வாழ்த்துத் தெரிவித்தார். உடன் 107வது வார்டு மாமன்ற உறுப்பினர் ருக்மணி நாராயணன்


ANYTHING & EVERYTHING ABOUT NUNGAMBAKKAM. SHORTLY LAUNCHING

www.chennai600034.com

ஓம் நமச்சிவாய

அனைவருக்கும் எமது இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

S. சசிதர்



செயற்குழு உறுப்பினர்

தமிழ்நாடு நிலம், வீடு, மனை தரகர்கள் நலச்சங்கம்

நுங்கம்பாக்கம், சென்னை - 34

போன் : 98844 74832, 91505 38606

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வீடு / ஃப்ளாட் / அலுவலகம்

வாடகைக்கு / வாங்க / விற்க



அணுகவும்

விக்னேஷ் ஹோம்ஸ்

இரண்டாவது மாடி,
பழைய எண். 188, புதிய எண். 132,
வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம் காவல்நிலையம் எதிரில்,

93807 04083, 93808 40393

அனைத்து பட்ஜெட்டில் வீடு வாடகைக்கு உள்ளது.

## எவ்வித முன்னறிவிப்பின்றி புதிய பேருந்து M129c பெரம்பூர் - நங்கநல்லூர்

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை வழியாகச் செல்லுகிறது.

மேற்கண்ட பேருந்தை இயக்கிய

மாநகர போக்குவரத்து கழகத்திற்கு நன்றி.

மாநகரப்போக்குவரத்து கழகம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை வழியாக கோயம்பேடு (CMBT) பேருந்து நிறுத்தத்திற்கு பேருந்து வசதி செய்து தருமா?

## ஆவின் 24 மணிநேர இலவச தொலைபேசி சேவை

**இலவச தொலைபேசி எண் : 1800 425 3300.**

ஆவின் மாதாந்திர பால் அட்டைகளை பெறுவது மற்றும் பால் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பெற ஆவின் நிர்வாகத்தினர் 24 மணி நேர இலவச தொலைபேசி சேவையை துவக்கி உள்ளனர். இலவச தொலைபேசி எண் : 1800 425 3300.

இனி ஆவின் அட்டைக்கு முகவரிச் சான்று அவசியம் என ஆவின் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சாதாரண நுகர்வோர் அல்லாத தனிநபர்கள் வணிக நோக்கில் பால் அட்டைகள் மூலம் ஆவின் பாலை வாங்கி, உணவகங்கள், டீக்கடைகள் ஆகியவற்றுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்து லாபம் ஈட்டுவது ஆவின் நிறுவனத்திற்கு தெரியவந்துள்ளது.

இதனால் ஆவின் பால் விநியோகத்தில் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுவது தொடர்ந்தது.

இதைத் தடுக்கும் வகையில் மாதாந்திர பால் அட்டைகளை வாங்க, ரேஷன் அட்டை உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட இருப்பிடச் சான்று ஆவணங்களின் நல்களை அவசியம் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆவின் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

இதற்காக வங்கி சேமிப்புக் கணக்கு, ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், வாக்காளர் அடையாளர் அட்டை, பான்கார்டு, அஞ்சல் துறை வழங்கும் இருப்பிடச் சான்றுக்கான அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்களையும் சமர்ப்பிக்கலாம்.

அடுத்த கட்டமாக நுகர்வோருக்கு 3 இலக்கங்கள் கொண்ட தனி குறியீட்டு எண்ணும் வழங்கப்பட உள்ளது. இந்த எண், பால் அட்டையில் அச்சிடப்படும்.

பிரத்யேக மென்பொருள் மூலம் இந்த விவரங்கள் அனைத்தும் கம்ப்யூட்டரில் தொகுக்கப்பட்டு சரிபார்க்கப்படும். இதன்மூலம் போலியான நபர்கள், ஆவின்பால் அட்டைகளை வாங்குவதை தடுப்பதற்கு ஆவின் நிர்வாகம் திட்டமிட்டு உள்ளது.

### நுங்கம்பாக்கத்தில்

## மின்சார வாரிய கருத்துக்கேட்பு கூட்டம்

உச்சநேர மின் தடையில் இருந்து விலக்களிப்பு கோரும் உயர் அழுத்த நுகர்வோருக்கு நம்பக கட்டணம் வசூலிப்பது குறித்து மின்வாரியம் பொதுமக்களிடம் கருத்துக்களை கேட்க உள்ளது. இந்த கூட்டம் 30-12-2009 தேதி நடைபெறும்.

நுங்கம்பாக்கம் ராணி சீதை ஹாலில் (ஜெமினி மேம்பாலம் அருகில்) 30-12-2009 அன்று முற்பகல் 11 மணிக்கு மேல் பிற்பகல் 2 மணிவரை உச்சநேரமின் தடையில் இருந்து விலக்களிப்பு கேட்கும் உயர் அழுத்த நுகர்வோருக்கு நம்பக கட்டணம் வசூலிப்பது பற்றி பொதுமக்களிடம் மின்வாரியம் கருத்துக்களை கேட்கும் கூட்டம் நடைபெறுகிறது.

ஆர்வம் உள்ளவர்கள் 30-12-2009 அன்று முற்பகல் 10 மணிக்கு மேல் 11 மணிக்குள் கூட்டம் நடைபெறும் இடத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது நடைமுறையில் இருக்கும் உச்சநேர மின் தடையிலிருந்து விலக்களிப்பு கோரும் உயர் அழுத்த நுகர்வோருக்கு நம்பகக் கட்டணம் விதிப்பதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனுச் செய்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம், 2009 டிசம்பர் மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரையிலான கால அளவின் போது யூனிட் ஒன்றுக்கு ரூ.7க்கு மேற்படாத நம்பகக் கட்டணம் உள்ளடங்கலான மின்கட்டணத்தை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளது.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 64ஆம் பிரிவின் கீழ் ஆணையிடப்பட்டவாறு பொதுமக்கள் தங்களுடைய கருத்துரைகளையும் குறிப்புரைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கும் அனுப்பலாம்.

இந்த உத்தேசத் திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.tneb.in)

உத்தேச திட்டம் 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 88ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆலோசனைக் குழுவினால் 2009 டிசம்பர் 23அன்று பரிசீலனை செய்யப்பட உள்ளது.

**தமிழ் டைப்பிங் தெரிந்த பெண்கள் வேலைக்குத் தேவை**

**பெண்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**


**DTP தெரிந்தவர்கள் வேலைக்குத் தேவை.**

**8/1, அகத்திமுத்தன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.**

**போன் : 99412 98629**

# SAI RAM CALL DRIVER'S

(Govt Regd)



**(24 hours service)**

Dear customers we are entering 4th year of our service in this field with your support

**98401 60269**

Well experienced, reliabled drivers available

Travels vehicle available for local & out of station



Prop : **Sairam K. Shrinivas**

# Xmas Show
# Winter Shopping Festival

A Mega Xmas show 2009, organized by PRINS ZONE EXPO PVT.LTD. for the first time in India will be held at Valluvarkottam Hall (A/C) in Chennai from 23rd to 27th December 2009. (Time 23rd and 24th 2 PM. to 9 PM., 25th to 27th 11 AM to 9 PM). The various competitions



planned under the Xmas Show 2009 are the Crib Competition, Xmas Tree Competition and Star Lamp Competition in which 50 teams take part. In addition an exhibition of cakes from prominent bakeries in Chennai and a Cake Decoration Competition for the ladies are the special attraction.

The Winter Shopping Festival , an integral part of the Xmas Show 2009 offers you the best products manufactured by branded Companies. The stalls provide you stars colourful lights, trees, Crib sets, dolls, other decorative articles for daily use, Christain Literature, CDs, Photo etc. 'AN EXHIBITION OF DIFFERENT BIBLES also is arranged.



The Xmas Feast, sans liquor, offers you the opportunity to enjoy Tanduri, Arabian, Chinese Chettinadu and Kerala Style of food in the enticing Xmas atmosphere of melodious music.

The Xmas Father, Santa Clause in his cart driven by the deers has a lot of surprising gifts to the children in the House of hidden gifts.

Our Xmas Greetings to one and all. ALL ARE WELCOME.

For more details and particulars of stalls please contact - 09940559696, 09840128552, 044-26262630.

Advt

EXCLUSIVE BEAUTY SHOP FOR LADIES & KIDS

**DHARSANA**
Beauty Parlour

- Bridal Makeup
- Hair Spa
- Hair Fall Treatment
- Dandruff Treatment
- Under Eye Teatment
- Pimple Treatment
- Hair Coloring

& More
@ Surprise Rates


58/19. North Mada Street,
Nungambakkam, Chennai - 600034


**வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
எமது இனிய கிறிஸ்துமஸ், புத்தாண்டு நல்வாழ்க்கள்!**

**சிங்காரச்சென்னை**

(தமிழ் மாதம் இருமுறை)
58/19, வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
போன் : 98403 44783, 4359 6070
மின்னஞ்சல் : singharachennai@gmail.com













**28-12-2009 அன்று பிறந்த நாள் காணும் எங்கள் இதய நிலா
மக்கள் தளபதி**

## ஐயா G.K.வாசன், M.P.

**(மத்திய கப்பல் போக்குவரத்து துறை)
அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.**



**K. வெங்கடேசன்**
மாநில தலைமை நிலையச் செயலாளர்
TNEB, INTUC



**E.P. வாசுதேவன்**
108வது வட்ட காங்கிரஸ்



**S.M.T. சேகர்**
தலைவர், 107வது வட்ட காங்கிரஸ்

**28-12-2009 அன்று இராமா தெரு கற்கோடியம்மன் கோயிலில் சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.**



# பொதுமக்கள் அனைவருக்கும்

## எனது இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## ரெட்சன் C.அம்பிகாபதி, Ex.M.C



India's No.1

# FAST TRACK®

Call Taxi

CHENNAI

**2473 2020**

**2888 9999**

India's No.1

TOP4 Call Drivers

A reason to travel...

# TOP4

## Call Drivers



**உங்கள் கார் ஓட்டுநர் இன்று வரவில்லையா ?**

**கவலை வேண்டாம் ?**

சென்னை முழுவதும்

தற்காலிக ஓட்டுநர்கள் பணி செய்ய தயார்

1 மணிநேரத்திற்கு முன்பாக போன் செய்யுங்கள்

**2825 7777 / 6060 5454**

| வடபழனி | அடையார் | குரோம்பேட்டை | அண்ணாநகர் |
|---|---|---|---|
| 2481 8888 | 2446 7888 | 2223 6161 | 2621 8181 |

*Wish you happy xmas and New Year*

# ARUN TAILORS

No.5, Kutty Street, Nungambakkam, Chennai-34.
Ph : 2825 6565, Cell : 94445 55569

**Elegant Men's Wear, Specialists in Catering, Industrial, Hospital, School Uniform and All Type of Tailoring.**

# ARUN UNIFORMS

No.19, Kutty Street, Nungambakkam, Chennai-34.
Ph : 2825 6721, 4218 6721

**Hotel Management, Hotels, Companies, Industrial Uniform Available.**

# ARUN FASHIONS

No.304, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai-34. Ph : 2825 8585

**Exclusive for Ladies & Childrens Tailoring**

# ARUN MEN'S WEAR

**Pant, Shirt, Safari, Wedding Suit, Blazzar & all types of Tailoring**

**No. 65, Valluvar kottam high Road, Nungambakkam, Chennai - 34.** (Opp. Police Qtrs. Bus Stop) **Ph : 2825 9595**

குழந்தை ஏசுவே போற்றி! போற்றி!
மாதாமலை மாதாவே நமோஸ்துதே!
தோமா அப்போஸ்தலரே நமஸ்காரம்!
தோமா வழி 108 உன்னத புரோகிதர்களே சாந்தி!
கருங்கல்

## மாதாமலை தோமா திருத்தலம் TMJAT

(மாதாமலை செயின்ட் தோமஸ் பஸிலிக்கா தெய்வாலயம்)
(திருவிதாங்கூர் மலங்கரை யூதாரியர் டிரடிஷனல்ஸ்- TMJAT)
கப்பியறை கிராமம், பத்மநாபபுரம் அரண்மனை தேசம்,
(முந்தய திருவனந்தபுரம் ஜில்லா - கேரளம்)
தென்திருவிதாங்கூர், கன்னியாகுமரி மாவட்டம்
தென் இந்தியா, தபால் - 629156
Email : tmjatmathamalai@gmail.com

ஏழரைப்பள்ளிகளில் ஒன்றான திருவிதாங்கோடு அரப்பள்ளியை (ஏ.பி.52-70ல்) மாதாமலையில் அரசகுல "அனந்தபெருமாள் முதல் உன்னத புரோகிதர்" 11-உடன் தங்கியிருந்துகொண்டு கட்டியபோது, மாதா தோமாவுக்கு காட்சி கொடுத்த புனித மலை (சிறப்பு வழிபாடு 2009, டிசம்பர் 18 முதல் 27 முடிய)

### நாம் யாவருக்கும்
### தோமா ரெக்தசாட்சி தினம் - டிசம்பர் 21 (துக்றோனா)
### அனுகிரகங்களும்
### மார்கழி உத்திரட்டாதி (ஏசு பிறப்பு) 2009ல் டிச. 25
### வாழ்த்துக்களும் உரித்தாகுக!



முதல் மனித குலம் தோன்றிய நமது தென் இந்தியாவில் மாதாமலை தோமா திருத்தலத்தில் அனுகிரகங்கள் நல்கும் ஏசு பகவானும், மாதாவும், குல தெய்வமான தோமாவும் 108 உன்னத பாரம்பரிய புரோகிதர்களும், நாம் யாவரையும், தென் இந்தியாவின் பேரப்பிள்ளைகளான உலக மக்கள் யாவரையும் அனுகிரகிப்பார்களாக! உங்கள் தேவைகள் நிறைவேறட்டும்!

சுபம்
By
**மாதாமலை திருமேனி**
(அபிவந்திய டேவிட் ஆர் தோமஸ் றசூல் திருமேனி) 109-ம் HTPT

## கண்ணீர் அஞ்சலி

TMJAT மாதாமலை அறக்கட்டளையுடைய நிர்வாகக்குழு உறுப்பினரான ஆழ்வார்கோயில் கிராமம் (நெய்யூர்) எஸ். பரமேஸ்வரன் ஐயர் அவர்களுடைய மருமகன்

### திரு. கணேஷ்


(6, அலமேலு அப்பார்ட்மெண்ட்ஸ், மாம்பழச்சாலை, திருச்சிராப்பள்ளி)
அவர்கள் நவம்பர் மாதம் 19ம் நாள், 2009 அன்று இயற்கை எய்தினார். அவர்களுடைய ஆத்துமா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். பிரிவால் வருந்தும் அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் யாவருக்கும் மாதாமலை அறக்கட்டளை சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி



திரு. **D.பலராமன்**
44, தாமரைப் பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் TMJAT மாதாமலை அறக்கட்டளையுடைய நிர்வாக குழு உறுப்பினரும், திரு. J.அன்பு - வெள்ளியூர், அவர்களுடைய மாமா
திரு. **D.பலராமன்**
அவர்கள் 14-12-2009 அன்று இயற்கை எய்தினார். அவர்களுடைய ஆத்துமா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். பிரிவால் வருந்தும், அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர் யாவருக்கும், கருங்கல் TMJAT மாதாமலை செயின்ட் தோமஸ் பஸிலிக்கா தெய்வாலயம் சார்பிலும் மாதாமலை அறக்கட்டளை சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.













**2009 டிசம்பர் 18 முதல் 27 முடிய மாதாமலை திருவிழாவிற்காக புனித பொருட்கள் எடுத்தல்**
1 & 2 : சாந்தோம் தோமா கல்லறை சமீபம் புனித மண்ணெடுத்தல்
3 & 4 : பெரிய மலை (மவுண்ட்) புனித மண், திரி எடுத்தல்
5. சின்னமலையிலிருந்து புனித நீர் எடுத்தல்

கருங்கல்

# மாதாமலை தோமா திருத்தலம் (TMJAT)

தோமா திருநாளும் - மார்கழி உத்திரட்டாதி (ஏசு பிறப்பு) தினமும்
சிறப்பு வழிபாடு டிச 18 முதல் 27 (முடிய)

## மாதாமலை திருத்தலம் வரலாறு

உலகிலேயே முதல் மனித குலம் தோன்றியதும், லமூரியாக்காண்டத்தில் உள்பட்டதும், அகஸ்திய முனிவர் தங்கியிருந்து தபசு அனுஷ்டித்து சித்த வைத்தியம், ஜோதிஷம் போன்ற நூல்களை எழுதியதும், குஜராத்திலுள்ள துவாரகா இடத்திலிருந்து ஆரியர்களைக் கொண்டுவந்த வடக்கே கோகர்ணம் முதல் தெக்கே குமரி வரை 64 கிராமங்களில் யூதாரியர் பாரம்பரியர்களுடன் சேர்ந்து வாழ வைத்துள்ளதும் திருவள்ளுவர் பிறந்து வளர்ந்து திருக்குறளை எழுதியதும், பாண்டவர்கள் சஞ்சரித்து வாழ்ந்திருந்ததும், தாவீது - சாலமோன் அரசர்கள் வந்து வியாபாரம் செய்திருந்திருந்ததும், ஏசு பகவான் தனது 12 வயது முதல் 30 வயது வரை வந்து நமது பூர்வீகர்களான யூதாரியர் பாரம்பரிய சித்தர்கள் ரிஷிகள், மகரிஷிகள், ஞானிகள், வானசாஸ்திர வல்லுநர்கள், திருவள்ளுவர் போன்றோரிடம் வாழ்ந்திருந்ததும், ஏசுவின் சீஷர் தோமா வந்து ஏபி. 52 முதல் 70 வரை வாழ்ந்து ஏழரைப் பள்ளிகளை ஸ்தாபித்து திருவிதாங்கோட்டில் அரப்பள்ளி என்ற ஒரே ஒரு தெய்வாலயத்தைக் கட்டி மாதாமலை அனந்த பெருமாளை முதல் உன்னத புரோகிதராக நியமித்து பிற புரோகிதர்களை ஏற்படுத்தி உள்ளதும், மாணிக்க வாசகர் வந்துள்ளதும், ஏ.மு. 150 வருடம் முதல் ஏ.பி.900 வரை ஆய்வம்ச பெருமாள் ராஜாக்கள் ஆண்டதும், பேர்ஷியாவிலிருந்து இறைதூதர் முகமது நபி அவர்களுடைய போதகர்கள் வந்துள்ளதும், ஏழாம் நூற்றாண்டில் கினானாயித்தொம்மன் என்பவருடன் சிரியர்கள் வந்துள்ளதும், ஆகிய தென் இந்திய யூதாரியர் பாரம்பரிய சமூகம் காணப்படும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாதாமலை அமைந்துள்ளது.

முன்னாள் திருவனந்தபுரம் ஜில்லா - கேரளம், தென்திருவிதாங்கூர் பத்மநாபபுரம் அரண்மனை தேசத்தில், கருங்கல் நகரத்தின் வடகிழக்கு பகுதியில், கப்பியறை கிராமத்தில், 2000 அடி உயரத்தில் இயற்கை மரங்கள், செடி, கொடி, மூலிகைகள், பறவைகள், விலங்கினங்களுடன் அமைந்துள்ள மாதாமலை தோமா திருத்தலம் என்பது, ஏசுவின் சீஷர் தோமாவுக்கு அவர் திருவிதாங்கோட்டில் அரப்பள்ளி தெய்வாலயத்தை கட்டியபோது, மாதாமலையில் வைத்து மாதா காட்சி கொடுத்து, உடனடி மைலாப்பூர் போகுமாறு கூறவே, பாதியில் கட்டுமானப்பணி விடுபட்டுபோன திருவிதாங்கோடு தெய்வாலயம் அரப்பள்ளி என்றும் மாதா காட்சி கொடுத்த காரணத்தால் மாதாமலை என்றும அழைக்கப்படுகிறது.

இந்த மலையில் தோமா கால்பாதம், குரிசுமேடு, பழைய தெய்வாலயம், பழைய கிணறு, தோமா குரிசு பாறை பீடம், குழந்தையும் மாதாவும் பீடம், தோமா நீர் ஊற்று, நவகிரக வழிபாட்டு பாறை, 27 நக்ஷத்திர வழிபாட்டு ஸ்தலங்கள், மீட்ஜயர் வீடு, நான்கு திசைகளிலும் சிலுவை பாதைகள், தோமா - மாதா குகை கல்வெட்டுகள் (தோமா தங்கியிருந்த குகையில் காணப்பட்டிருந்த தோமா திருசொரூபம், மாதா திருசொருபம், மணி, கோயில், பாறையில் செதுக்கப்பட்டிருந்த தோமாவின் காலம் முதல் 108 உன்னத பாரம்பரிய புரோகிதர்களின் கல்வெட்டுகள், பெயர் விபரம் போன்றவற்றை 2003க்குப் பிறகு பாறைகள் தகர்க்கும் சில கிறிஸ்தவர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. அரசர் ஆட்சியில் 108 உன்னத புரோகிதர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த அபூர்வ சின்னங்கள், தக்கலை முன்னாள் R.D.O. திரு லட்சுமணன் அவர்கள் வந்து ஸ்தலம் பரிசோதனை நடத்தி இந்த மாதா மலையில் தெய்வாலயம் உள்ளதால் பாறைகள் உடைக்கக்கூடாது என்று கட்டளையிட்டு சென்றார். ஆனால் பின்னால் வந்தவர்களின் ஒத்தாசையுடன் மாதாமலை தோமா குகை, மாதாகுகை, பூர்வீக கல்வெட்டுகள் அழிக்கப்பட்டன) அமைந்திருந்த புனித ஸ்தலம், குரிசு நட்டபுரயிட தெய்வாலயம் மூன்று முறை சில கிறிஸ்தவர்களால் தீ வைத்தும் மேலும் எந்திரங்களால் அழித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.(35 செண்ட் ஸ்தலம் + 14.5 செண்ட் ஸ்தலம், 109ம் மாதாமலை திருமேனி அவர்களால் திருவனந்தபுரம் பட்டம் M.S.C. சபை அபிவந்திய சிரில் திருமேனிக்கு கொடுக்கப்பட்டுள்ளது). ஏசு கொல்கோதா மலையில் சிலுவையில் அறையப்பட்டபோது உலகில் நிலநடுக்கம் ஏற்பட்டவேளையில் இந்த மாதாமலை மலையில் பிளவுண்ட 4 பாறைகளும், 108 உன்னத பாரம்பரிய புரோகிதர்களை தொடர்ந்து 109ம் திருவிதாங்கூர் உன்னத பாரம்பரிய புரோகிதரான மாதாமலை திருமேனி, அபிவந்திய டேவிட் ஆர் தோமஸ் றகுல் திருமேனி அவர்கள் நோன்பு இருக்கும் ஸ்தலம் போன்றவைகளில் பாரம்பரியமாக வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மாதா திரு. சொரூபம், தோமா திரு சொரூபம் முன்னால் தேங்காய் உடைத்தல், நைவேத்யம் படைத்தல், பத்தி, மெழுகு திரி, பூமாலைகள், கற்பூரம், பன்னீர், எலுமிச்சை பழம், குந்திரிக்கம், சந்தனம், மஞ்சள், பால், இளநீர், நெய்தீபம், மாதாவுக்கு வளையல் அணிவித்தல் போன்ற யூதாரிய பாரம்பரிய முறையில் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

தோமா தீபம் அரப்பள்ளியிலிருந்து கொண்டுவருவதும், மேல்மிடாலம் கடலில் தோமா - மாதா ஆறாட்டு நடத்துவதும் விசேஷம் ஆகும். திருவிழாவுக்கு முன்னால் ஏழரைப்பள்ளிகளிலிருந்தும், சாந்தோம் கடற்கரை மணல், சின்னமலை - மலையாற்றூர் புனித நீர், பெரிய மலை மண், அர்மேனியன் தெய்வாலயத்திலிருந்து திருவஸ்துக்கள் இவை கொண்டுவந்து மாதாமலையில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

மார்கழி மாதம் உத்திரட்டாதி (ஏசு பிறப்பு) நாளிலும், தோமா ரெக்தசாட்சியாக மரித்த டிச 21 நாளிலும், துக்க வெள்ளி - உயிர்ப்பு மற்றும் அடுத்த எட்டாம் நாளிலும் சிறப்பு வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறுகின்றன.

TMJAT மாதாமலை அறக்கட்டளை பராமரிப்பில் இந்த வழிபாடுத்தலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

By

**மாதாமலை திருமேனி**

(அபிவந்திய டேவிட் ஆர் தோமஸ் றகுல் திருமேனி) 109-ம் HTPT

RNI Regn. No.TN TAM/2001/03914 R.Dis.No.1288/2008



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



**உங்கள் நல்லாதரவுடன்**
**நாங்கள் 35வது வருடத்தை கொண்டாடுகிறோம்**

# சரஸ்வதி பவன்




## இனிப்பகம்

## பேக்கரி & ஸ்நாக்ஸ்

92, (208) வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை
**Ph : 2826 1956**




## புத்தாண்டு சிறப்பு சலுகை

**எங்களது தயாரிப்புகளான ஸ்வீட், காரம் மற்றும் கேக் வகைகளை ரூ. 200 மேல் வாங்கினால் 1/4 கிலோ லட்டு இலவசம் (புத்தாண்டுக்கு மட்டும்)**

**புத்தாண்டு கேக்**
**கிறிஸ்துமஸ் கேக்**
**பிளம் கேக்**
**பிறந்தநாள் கேக்**
} ~~160~~ **140**

**ஃபிளைன் கேக்** - ~~120~~ **100**
**சாக்லேட் கேக்** - ~~15~~ **10**

வால்நட் மற்றும் அனைத்து வகையான கேக்குகள் கிடைக்கும்

# மணிகண்டன் பேக்கரி

## மற்றும் ஸ்வீட்ஸ்

**198,வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034**


Owned, Published and Printed by **S. RANGANATHAN,** published from 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034
and printed at **J.S.R. GRAPHICS & PRINTERS**, 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034. **Editor: S. RANGANATHAN.**